# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2021. 07. 19 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*குருணாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 17.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்)**

## அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

முன்னுரை

"அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு சொல்லப்பட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இன்று வரை இலங்கையில் புத்தளம் மாவட்டத்தில் இல. 65, வலவ்வத்த, தங்கொடுவ எனுமிடத்தில் அமைக்கப்பட்டிருப்பதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றத்தைக் கூட்டிணைத்தல்

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், தற்போது குறித்த அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (இதனகத்துப் பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்)அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்களும், இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக்

கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் "அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமைகொண்ட (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கூட்டிணைக்கப் பட்ட குழுவாதலும் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடனும், பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதன்விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :- கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

(அ) முன்பாடசாலைகளை ஆரம்பிக்க ஊக்குவித்தல், அவற்றை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை அமைத்தல் ஆகியவற்றினூடாக இலங்கையில் சிறுவர்களின் முன்னேற்றத்துக்கு நடவடிக்கை எடுத்தல்;

(ஆ) மீனவ, கமத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைகள் தொடர்பான கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் வெற்றிகரமாக கொண்டு நடாத்துவதற்கும் தேவையான தொழினுட்ப மற்றும் கலை நுட்பங்களை அறிமுகம் செய்தல், பயிற்சி செயலமர்வுகள் நடாத்துதல், இயன்றளவு நிதியுதவியளித்தலும் இதனுடன் தொடர்புடைய பலவித சேவைகளை வழங்கலும் ;

(இ) பாரம்பரிய கலாசாரக் கலைகளைப் பேணுவதற்கு உள்நாட்டு கலைஞர்களை இனங்கண்டு இவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக பல மட்டங்களில் மதிப்பீடுகளை மேற்கொள்ளலும் பலவித வசதிகளை வழங்கி பாரம்பரிய கலாசாரக் கலைகளை பாதுகாப்பதற்கு இவர்களின் பங்களிப்பை உச்சமட்டத்தில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் ;

(ஈ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை மேம்படுத்துவதனூடாக விவசாய மற்றும் மீனவ மக்களின் நலனோம்புகைக்கான கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றல் ;

(உ) அனைத்து மத வழிபாட்டுத்தலங்களையும் மேம்படுத்தல் மற்றும் மத சகவாழ்வை ஏற்படுத்துவதற்காக ஏனைய மதத்தினர்களுக்கிடையில் பரஸ்பர புரிந்துணர்வை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை செயற்படுத்தல் ;

(ஊ) மன்றத்தின் நோக்கங்களை நிறைவு செய்வதற்குத் தேவையானதும் சாதகமானதுமான வேறு பணிகளை மேற்கொள்ளல் ; மற்றும்

(எ) மன்றத்தின் நோக்கங்களுக்குச் சமனான நோக்கங்களைக் கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புக்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் பதினொரு பேரைக்கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபை ஒன்றின்மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினரான கௌரவ அருந்திக பர்னாந்து பணிப்பாளர்கள் சபையின் ஆயுட்காலத் தவிசாளராதல் வேண்டுமென்பதுடன், அதன் பின்னர் தவிசாளராகப் பதவியை வகிக்கின்ற ஆளின் நெருங்கிய உறவினர் பணிப்பாளர்கள் சபையின் அடுத்த தவிசாளராக வருதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்கள் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த நிருவாக சபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) தவிசாளர் தவிர்ந்த பணிப்பாளர்கள் சபையின் உறுப்பின ரொருவர் இறப்பினால், பதவி விலகலால், முன்னதாகவே தமது பதவி வெற்றிடமானாலொழிய, நான்கு ஆண்டுகாலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும். பணிப்பாளர் சபையின் உறுப்பின ரொருவரின் இறப்பின் காரணமாக அல்லது பதவி விலகலின் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து புதிய உறுப்பினர் ஒருவர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்ப நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புதிய உறுப்பினர் நான்கு ஆண்டு காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்

**5**. இச்சட்டத்தினதும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும் நிறை வேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப் பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறை வேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர் களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலை யிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மை வகுக்கப்படுதலும், உறுப்பினர்களை அனுமதித்தலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியை விட்டுவிலக்குதலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும், பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் மற்றும் அவர்களது தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்களும், தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும் ;

(ஈ) பணிப்பாளர்கள் சபையினதும், கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினராக வருவதற்கான தகைமைகள் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்துக்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக இதுகாலவரை அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கான எல்லாப் பணத் தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படற்பாலனவும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்

**9.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, ஏதும் உடன்படிக்கையின்கீழ் அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் இத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்துக்கு வருமதியாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்படவேண்டிய தொகையை விஞ்சுகின்றதான ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கலைக்கப் பட்டதன் மீது எஞ்சியிருக் கின்ற ஆதனம்

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதும் ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப் படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதுமான அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர் களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக் குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது கலைக்கப்படும்பட்சத்தில் அல்லது அதற்குமுன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப் படுதல் வேண்டும்.

கூட்டுத்தாப னத்தின் கணக்குகளும் கணக்காய்வும்

**12.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் ''தகைமை பெற்ற கணக்காய்வாளர்'' என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காள ரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் அத்துடன் பணிப்பாளர்கள் சபையின் அலுவலரொருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தம் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.